சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகள் சாட்சியம் அளிக்க வேண்டும் என கூறியதால் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். அவர்கள் என்னிடம் எவ்வாறு சாட்சியம் அளிக்க வேண்டும்என்றும், எவ்வாறு சொல்ல வேண்டும் என 1 முதல் 3 பிரதிவாதிகள் சொன்னார்களா என்றால் சொல்ல வில்லை. இந்த வழக்கின் வாதி யார் , என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. என்ன பரிகாரம் கோரி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், பிரதிவாதிகள் தரப்பில் என்ன பதில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்னிடம் அது பற்றி காண்பிக்கப்படவில்லை. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை எங்களது அலுவலகத்தில் வைத்து நான் விபரம் சொல்லி தட்டச்சு செய்து தாக்கல் செய்யப்பட்டது. தட்டச்சு செய்யப்பட்டதை 1முதல் 3 பிரதிவாதிகளின் வழக்கறிஞரிடம் கொடுத்து சரிபார்த்து தாக்கல் செய்துள்ளேன். நான் கொடுத்ததை தவறு இருப்பதாக கூறி திருத்தம் செய்து கொடுத்தாரா என்றால் திருத்தம் எதுவும் செய்து கொடுக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்து பார்த்து தான் தாக்கல் செய்தேன். மூ.த.சா.ஆ 2 ன்படி மோசை நாடார், பால்நாடார் ஆகிய இருவரும் வழக்கின் சொத்திற்கும், வாதிகளுக்கும் முன்னோர்கள் என்றால் எனக்கு தெரியாது.

ஆனால் ஆவணத்தில் உள்ளது. மூ.த.சா.ஆ 2 ல் ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. ஆனால் சர்வே எண் தவறாக உள்ளது. பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் கண்ட சொத்தை தான் என் தாத்தா கந்தசாமி நாடார் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். நான் 1966 ம் ஆண்டு பிறந்தேன். என் தாத்தா கிரையம் வாங்கிய பி.வா.சா.ஆ 1 ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் மூன்று இறங்கொத்தி ஆவணங்கள் உள்ளதாகவும் அதனை உட்படுத்தி ஒத்தியை மீட்டுக்கொள்ள வேண்டும் என ஏற்றுக்கொண்டு என் தாத்தா கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த மூன்று ஒத்தியையும் என் தாத்தா மீட்டு விட்டாரா என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு ஒத்தியை மீட்டதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் தெரியாது. நாங்கள் டிம்பர், மற்றும் ஹார்டுவேர் தொழில் செய்வதற்கு முறையான உரிமம் பெற வேண்டும் என்றால் சரிதான். என் தாத்தாவின் தொழிலை தான் பரம்பரையாக நாங்கள் செய்து வருகிறோம் என்றால்சரிதான். என் தாத்தா காலத்தில் உரிமம் எடுத்ததாக தெரியவில்லை. எனது அப்பா காலத்தில் உரிமம் எடுக்கப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்பட்ட பி.வா.சா.ஆ 2 ஆவணமானது எனது தாத்தா மற்றும் அவரது வாரிசுகளுக்கு இடையே பிரிவினை செய்து கொண்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த பாக பிரிவினையில் 3 ம் அட்டவணையில் 14 வது லக்க சொத்தாக கணேசன் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை தான் எனது தாத்தா கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களை நானும், எனது உடன்பிறந்தவர்களும் பி.வா.சா.ஆ 4 ன்படி 28.2.2005 தேதியில் பாக பிரிவினை செய்து

கொண்டதாக உள்ளது என்றால் சரிதான். அந்த பாக உடன்படிக்கையில் நான் 2 வது நபர் என்றால் சரிதான். என் சகோதரர் இறந்து போன ராஜகுமாரின் வாரிசுகள் தான் 4 முதல் 7 பிரதிவாதிகள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் கண்ட 5 வது அட்டவணை சொத்தில் 10 அயிட்ட சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட எல்லா சொத்துக்களும் பாகம் பிரிக்கப்பட்டு விட்டது. அதனை பொறுத்து நான் பி.வா.சா.ஆ 4 ஆவணத்தின்படி அனைத்து சொத்துக்களும் பிரிக்கப்பட்டு விட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் 5 வது அட்டவணையில் காட்டப்பட்ட அனைத்து சொத்துக்களும் 5 ம் அட்டவணையில் சொத்துக்களை ஒதுக்கப்பட்ட நபர்களை தவிர்த்து நான், உள்பட வேறு யாருக்கும் உரிமையில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 4 ஆவணத்திற்கு விபரங்கள் கூறியது யார் என்றால் சம்பந்தப்பட்ட நாங்கள் அனைவரும் சேர்ந்து முன் ஆவணங்களை காண்பித்து தயார் செய்தோம். தயார் செய்து பிழைகள் நீக்கப்பட்டதா என்றால் இல்லை. தட்டச்சு செய்த பின்பு எந்த பிழைகளும் இல்லை. பி.வா.சா.ஆ 4 ல் 5 வது அட்டவணை 10 வது அயிட்ட சொத்தில் மேற்படி நிலம் யு.டிஆர்.படி 343 நிர் 1 முதல் 8 நிர்களில் கட்டுப்பட்டது என பேனாவினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபரம் படித்து பார்த்த பின்பு அதனை சரி பார்த்து பேனாவால் எழுதப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் 5 வது அட்டவணையில் 11 வது அயிட்ட சொத்து எல்கையாக கணேசன் சாலை என சொல்லப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ 3 ஆவணத்தில் குறிப்பிடப்படும் கணேசன் சாலையை

குறிக்கும் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு வழக்கு சொத்தை பொறுத்து எந்த வருடம் பட்டா கொடுத்தார்கள் என்றால் நில உடமை திட்டத்தில் கொடுக்கப்பட்டு விட்டது. அந்த பட்டா கொடுத்ததற்கு பின்னிட்டு பி.வா.சா.ஆ 2, 4 எழுதப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு பட்டாவின் அடிப்படையில் தான் பி.வா.சா.ஆ 2,4 எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் சகோதாரர் ராஜ்குமார் வாரிசுகளான 4 முதல் 7 பிரதிவாதிகள் பி.வா.சாஆ 5 ஆவணத்தின் மூலம் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 5 ஆவணத்திற்கு முன் ஆவணமாக பி.வா.சா.ஆ 4 ஆவணமான பாக ஆவணத்தை சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரத்தின்படி பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், அந்த ஆவணத்தில் எத்தனையாவது சொத்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் 10 வது அயிட்டமாக சொல்லப்பட்டுள்ளது. 10 அயிட்டமாக காட்டப்பட்டுள்ள சொத்தில் எனக்கு உரிமையுள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ 6 ஆவணம் யார் எழுதிக் கொடுத்தது என்றால் கணேசனின் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து எழுதி கொடுத்துள்ளோம். பி.வா.சா.ஆ 6 ஆவணத்தில் எழுதிகொடுப்பவர்களில் 4 வது நபராக எனது பெயர் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 6 ஆவணத்தின்படி ரொக்கமாக ரூ.2,80,000/−ம் கிரைய தொகையாக பெற்றுக்கொண்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 6 ஆவணத்தில் கண்ட சொத்தானது வாய்மொழியாக என் அப்பா கணேசனுக்கு கிடைத்த சொத்து என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாய்மொழி பாக பிரிவினை எப்போது ஏற்படுத்தப்பட்டது என்றால்

பி.வா.சா.ஆ 6 எழுதிய தேதிக்கு ஒரு நாள் முன்னர் ஏற்படுத்தப்பட்டது. 1 முதல் 3 பிரதிவாதிகள் கேட்டுகொண்டதால் பி.வா.சா.ஆ 6 ஆவணம் எழுதப்பட்டது. பி.வா.சா.ஆ 2 ன்படி ஏற்படுத்தப்பட்ட பாக பிரிவினை ஆவணம் தான் இறுதியானதாகும். பி.வா.சா.ஆ 6 ஆவணம் வங்கியில் கடன் வாங்குவதற்காக எழுதப்பட்டதாகும். பி.வா.சா.ஆ 6 ஆவணத்தின்படி கிரையம் கொடுத்த பிறகு கிரைய தொகை ரூ.2,80,000/−த்தை நான்கு நபர்களும் பிரித்து கொண்டோமா என்றால் பிரித்து கொண்டோம். 4 முதல் 7 பிரதிவாதிகள் ஊரில் தான் இருக்கிறார்கள் என்றால் 4,7 பிரதிவாதிகள் உள்ளூரில் தான் இருக்கிறார்கள். அவர்கள் நீதிமன்றத்தில் வந்து சாட்சியம் அளிக்க தகுதி உள்ளவர்கள் தான். என் முதல் விசாரணை வாக்கு மூலத்தில் சொல்லியுள்ள கல்யாணபிள்ளை, நடராஜபிள்ளை ஆகியோர்கள் வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்டவர்களா என்றால் சம்பந்தப்பட்டவர்கள் தான். அவர்கள் வழக்கு சொத்திற்கு தென்பக்கம் உள்ளவர்கள். கல்யாணபிள்ளை, நடராஜன் ஆகியோர்கள் எப்போது சொத்துக்களை கிரையம் வாங்கினார்கள் என்றால் அது பற்றி தெரியாது. எப்போது பாக பிரிவினை கிடைத்து என்பது பற்றி தெரியாது. அவரிடம் இருந்து செல்லையா கங்கனி என்பவருக்கு எவ்வாறு உரிமைப்பட்டது என்றால் தெரியாது. செல்லையா கங்கனி என்பவர் நடராஜன் மகன் என்றால் சரிதான். மூ.த.சா.ஆ 1 ஆவணத்தில் சர்வே நம்பரை பொறுத்து தட்டச்சு பிழை ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பிழையை என் தாத்தவோ, என் அப்பாவோ, அதன்பின்னிட்டு பாக பிரிவினையில் கிடைத்த நபர்களோ, அல்லது 1 முதல் 3 பிரதிவாதிகளோ சீர்திருத்தம் செய்ய எவ்வித சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். தற்போது தெரிந்து விட்டதால் நடவடிக்கை எடுக்கப்பட்டு

வருகிறது. வழக்கு தாக்கல் செய்தபிறகு தான் சர்வே எண்ணில் பிழை உள்ளது தெரியும். நான் அந்த சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன். 2016 ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்யும் போது எனக்கு தெரியவந்தது. அந்த சொத்து என் அப்பாவின் சொத்து என்பதால் சீர்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வழக்கு சொத்தானது வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், வசதிபடைத்த நபர்களான 1 முதல் 3 பிரதிவாதிகள் அபகரிக்கும் நோக்கத்தில் செயல்பட்டு வருகிறார்கள் என்றும், நான் வழக்கு சொத்திற்கு முன் உரிமையாளர் மகன் என்று எவ்வித ஆவணமும் இல்லாமல் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. என் சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.